மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் (தொ.அ.ஈ), சென்னை –06
அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை மரு.இரா.இளங்கோமகேஸ்வரன், M.S.,DCH.,

ந.மு.எண்.19436/தொஅஈ/அ5/2/2023 நாள்.27.11.2024

பொருள்: அலுவலக நடைமுறை – மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொஅஈ) இயக்ககம், சென்னை–06 –தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி –4 மூலம் தேர்வு செய்யப்பட்டு இவ்வியக்ககத்தில் பணியில் இணைந்தது– இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்: 417 பணியாளர் மற்றும் நிர்வாகச்சீர்திருத்தத் துறை, நாள் : 01.12.1993
2. அரசாணை எண்: 416 பணியாளர் மற்றும் நிர்வாகச்சீர்திருத்தத் துறை, நாள் : 21.02.2002
3. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித எண்.1960/PSD–D2/2023 நாள்.02.09.2023.
4. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடித எண்.56867/நி2/2/2023, நாள்.21.09.2023
5. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ) இயக்குநரின் பணி நியமன ஆணை எண்.11391/ தொஅஈ/நி2/1/2023–13,44,45,46,47,48,49,51 நாள்.22.09.2023.

.....

ஆணை:

பார்வை 3– இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தின் படி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களுக்கு பார்வை 5– இல் காணும் இவ்வியக்கக ஆணையின்படி பணியிட அமர்வு ஆணை வழங்கப்பட்டது. அதன்படி கீழ்க்காணும் இளநிலை உதவியாளர்கள் தங்கள் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இவ்வியக்ககத்தில் இளநிலை உதவியாளர்களாக அரசுப் பணியில் இணைந்துள்ளனர்.

மேற்குறிப்பிடப்பட்ட இளநிலை உதவியாளர்கள் தமிழ்நாடு மாநில சார்நிலைப்பணிகள் பொதுவிதி 10(a)(1) –ன் படி பணிநியமனம் பெற்று இவ்வியக்ககத்தில் இளநிலை உதவியாளர்களாக அரசுப் பணியில் இணைந்த நாள் முதல் பணி வரன்முறை செய்து கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பணியாளர் பெயர் | அரசுப் பணியில் இணைந்த நாள் | பணி வரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | C.கோமதி | 04.10.2023 மு.ப | 04.10.2023 மு.ப |
| 2. | B.ஜெயப்பிரியா | 04.10.2023 மு.ப | 04.10.2023 மு.ப |
| 3. | M.ஜீவா | 18.10.2023 மு.ப | 18.10.2023 மு.ப |
| 4. | S.விஜயன் | 18.10.2023 மு.ப | 18.10.2023 மு.ப |
| 5. | G.சம்பத்குமார் | 18.10.2023 மு.ப | 18.10.2023 மு.ப |
| 6. | K.லதா | 18.10.2023 மு.ப | 18.10.2023 மு.ப |
| 7. | S.உதயக்குமார் | 20.10.2023 மு.ப | 20.10.2023 மு.ப |
| 8. | R.எழிலரசன் | 25.10.2023 மு.ப | 25.10.2023 மு.ப |
| 9. | S.சிவபார்வதி | 25.10.2023 மு.ப | 25.10.2023 மு.ப |

மேற்படி பணியாளரின் பணி வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டு பணிக்காலத்திற்குள் இரண்டு ஆண்டு பணிக்காலத்தை திருப்திகரமாக முடிக்கும் வரையில் அன்னார் தகுதிகாண் பருவ காலத்தில் வைக்கப்படுகிறார். தனியர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் கீழ்கண்ட தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்.

1) தமிழ்நாடு மருத்துவ விதித் தொகுப்பு
2) அரசு அலுவலர்களுக்கான சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி

மேற்குறிப்பிட்ட இளநிலை உதவியாளர்களின் தற்காலிகப்பணி இளநிலை உதவியாளர்களாக அரசுப் பணியில் இணைந்த நாள் முதல் 2018- 2019 ,2019- 2020 ,2020-2021 வரையிலான கால கட்டத்திற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி-4 தேர்வு நியமனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக்கிளையில் நிலுவையில் உள்ள நீதிப்பேராணையின் மீது நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின் முடிவிற்கு உட்பட்டு பணி வரன்முறை செய்யப்படுகிறது.

மேற்கண்ட பணிவரன்முறை குறித்த பதிவுகள் தனியர்களது பணிப்பதிவேட்டில் பதியப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

ஒம்/- இரா.இளங்கோமகேஸ்வரன்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர் (தொ.அ.ஈ)

பெறுநர்
மேற்கண்ட இவ்வியக்கக இளநிலை உதவியாளர்,
நகல்

1) மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் , சென்னை-06.
2) இவ்வியக்கக நிர்வாகப் பிரிவு-2 / பணப்பிரிவு
3) பணிப்பதிவேடு
4) இருப்புக் கோப்பு / உபரி

//////உண்மைநகல்//அனுப்பப்படுகிறது//

இ.மா.ஜா 27/11/2024
நிர்வாக அலுவலர்(தொஅஈ)

இ.ரா 27/11/2024 க.தே 27/11/2024